மண்டைதீவு

சிவஸ்ரீ. சி. அகிலேஸ்வர சர்மாவின்

# பண்ணைப்பாலக் கும்மி.

பதிப்பாசிரியர்:


வே. இ. பாக்கியநாதன் பி. ஏ. எம். எஸ். சி.
உப அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
தெகிவளை.



ஆவணி 1986

ஆசிரியர்: சிவஸ்ரீ. சி. அகிலேஸ்வர சர்மா

பதிப்பாசிரியர்: வே. இ. பாக்கியநாதன்

தலையங்கம்: பண்ணைப் பாலக்கும்மி

பதிப்பு: முதற்பதிப்பு, ஆவணி 1986

அச்சுப்பதிப்பு: காயத்திரி அச்சகம், யாழ்ப்பாணம்

பக்கம்: 22

விலை:

தூயி தசாம்ச பகுப்பெண்: 894.8111

# பதிப்புரை

இலங்கைக்கு அச்சுக்கலை வந்த காலத்திலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த காலம்வரை ஈழத் தமிழர் தமிழுக்காற்றிய தொண்டு யாதென அறியவிரும்பிப் பல்வேறு நூலகங்களையும், அறிஞர் பெருமக்களினது தனிப்பட்ட சேர்க்கைகளையும் காணக்கூடிய, பாவனை செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது மண்டைதீவு சிவ ஸ்ரீ சி. அகிலேஸ்வர சர்மா அவர்கள் எழுதிவைத்திருந்த "பண்ணைப் பாலக் கும்மி" எமது கவனத்தை ஈர்த்தது. பண்ணைப் பாலத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவனென்ற வகையில் அதனை எனக்குத் தரும்படி நண்பரிடம் கேட்க அவரும் அதனை அன்புகனிந்து கொடுத்தார். அப்பொழுது மேலெழுந்தவாரியாக அதனைப் பார்த்தேனே யொழிய அதில் அடங்கியிருந்த விடயதானத்தை எமது வேலை மத்தியில் கவனிக்கவில்லை.

எவ்வளவோ பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் மத்தியில் கட்டி முடிக்கப்பட்ட இப் பாலம், இதனை அமைக்கும் பொழுதும் அதன் பின்னரும் பல உயிர்களைப் பலிவாங்கியுள்ளது. அண்மைக்கால சம்பவங்கள், அனர்த்தங்கள் மக்கள் மனதை விட்டகலா. இப்படிப்பட்ட பாலத்தை இன்றைய காலகட்டத்தில் பாவனைப்படுத்த முடியாத தீவகப் பகுதி மக்கள் அராலிப் பாதையைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். பிரயாணத்தின் போது அவர்கள் அல்லல் பட்டு ஆற்றாது விடும் கண்ணீரை, சோகக் கதைகளை நாம் கண்ணாரக் கண்டும், கேட்டுமுள்ளோம். அப்பாதையால் பிரயாணம் செய்து அராலிப் பாதை முடிவுறாதிருக்கும் நிலையினால் ஏற்படக்கூடிய விபரீதங்களை உணர முடிந்தது. மழை வரும் காலத்தில் இப்பாதையைப் பாவிப்பவர்கள் அடையவிருக்கும் இன்னல்கள், துன்பங்கள் சொல்லுதற்கரிது.

இப் பண்ணைப்பாலக் கும்மி இன்றைக்குத் நூற்றிமூன்று வருடங்களுக்கு முன் சர்மாவினால் எழுதப்பட்டு வெளியிடப்படாது இருந்ததாக அறியக்கிடக்கின்றது. இது அராலிப்பால அமைப்புக்கு எதிராக எழுதப்பட்ட கும்மி இலக்கியமாகும். அவர் எழுதிவைத்தவாறே இது பதிப்பிக்கப்படுகின்றது. இதனது உட்கருத்தை வாசித்து உய்க்கும் எவரும் கும்மியில் மறைந்து பொதிந்து கிடக்கும் பல்வேறு விடயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். இதில் இவரது ஆங்கில, தமிழறிவு வெகு

சிறப்பாகக் கையாண்டுள்ளார். அவரது கவிநயம் போற்றுதற்குரியதாகும்.

இக்கும்மியைப் பதிப்பித்து வெளியிடுவதற்கு மிக உகந்த காலம் இதுவெனக் கருதப்பட்டபடியினாலே இது பிரசுரிக்கப்படுகின்றது. பண்ணைப் பாலத்தைப் பாவித்தோர் பலருக்கு அதன் பின்னணி தெரிந்திருக்க நியாயமில்லை. இன்றைய இளந் சமுதாயத்தினருக்கு இது பற்றித் தெரிந்திருக்க வேண்டும். நாம் இன்று எதிர்நோக்கும் இக்கட்டான காலகட்டத்தில் அராலிப் பாலம் அமைக்க வேண்டியதன் அத்தியாவசியம் உணரக்கூடியதாகவுள்ளது. உண்மை நிலையினைச் சகலரும் புரிந்து ஆவன செய்ய வேண்டும் என்ற உந்துதலினாலேயே இதனைப் பதிப்பித்துள்ளேன். இதுகாலவரையும் இலைமறை காய்போல் இருந்து வந்த அமரர் சிவஸ்ரீ. சி. அகிலேஸ்வர சர்மாவின் கும்மியை அனைவரும் வாசித்து இன்புற வேண்டும் என்பதே எமது பேரவா.

இதனைக் குறுகிய காலத்தில் சிறப்புற அச்சிட்டுதவிய காயத்திரீ அச்சக உரிமையாளருக்கும் அச்சக ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

மாரியம்மன் வீதி, வே. இ. பாக்கியநாதன்
திருநெல்வேலி.
18-8-86

# முகவுரை

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கிலுள்ள தீவுகளில் வசிப்பவர்கள் யாழ்ப்பாண நகரத்துக்குப் போக்கு வரவு செய்ய மிகக் கிட்டிய மார்க்கம் மண்டைத்தீவுக்கும் யாழ்ப்பாண நகருக்கு மிடையிலிருக்கும் பண்ணைக் கடலைக் கடந்து செல்வதேயாகும். இரண்டு மைல் தூரமுள்ள இக்கடலை வள்ளமூலமாகவே கடந்து செல்ல வேண்டும். வண்டிகள், மோட்டோர் ரதங்கள் முதலியன தற்போது "பாதை"யில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றன. இப் "பாதை" எந்நேரமும் போக்குவரவு செய்வதில்லை. இதனால் மனிதர்களேனும் வண்டி முதலிய வாகனங்களேனும் அவசியம் போகவேண்டிய நேரங்களில் இவைகளிலேறிச் செல்ல முடியாதிருக்கின்றது. இவ்வித கஷ்டங்களை நெடுங்காலமாக அனுபவித்துச் சகிக்கமுடியாத தீவு நாட்டவர்கள் யாழ்ப்பாணத்துக்கும மண்டைத்தீவுக்கு மிடையிலுள்ள பண்ணைக் கடலுக்கு ஓர் பாலம் கட்டுவித்தல் வேண்டுமென்று கிளர்ச்சி செய்யலாயினர்.

இப் பண்ணைப் பாலத்தைக் கட்டுவித்தற்கு முதன் முதல் முயற்சி செய்தவர் துவைனம்துரை அவர்களே. இவர் இஞ்சினீயர் உவாயன் அவர்களுடன் கூடி யோசித்து, யாழ்ப்பாண இரேகிலிருந்து சிறுத் தீவு வரையுள்ள ஆழமற்ற கடலுக்கூடாக ஓர் ரேட்டுப் பாதையைத் திறந்து, சிறுத்தீவுக்கும் மண்டைதீவுக்கு மிடையிலுள்ள சொற்ப தூரமான கடலுக்கு ஓர் பாலம் கட்டுவதற்கு 50000 ரூபா போதுமென்று கவர்னருக்கு ஓர் அறிக்கைப்பத்திரம் அனுப்பினர். அப்போது அரசினர் பொக்கிஷசாலையிற் போதிய பணமில்லையென்று இம்முயற்சி கைவிடப்பட்டது. இப்படியே பின் வந்த ஏஜன்டர்களும் கவர்னர்களும் இப் பாலமிடுவதற்குச் சம்மதித்தும் பணமில்லையென்ற பதிலே மீட்டும் மீட்டும் வந்தது.

இஃதிப்படியிருக்க, சட்ட நிரூபணசபைக்குச் சனப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட போது தீவுப்பகுதிகளுக்கு கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தனுப்பப்பட்டார். பொது வேலைகளுக்குப் பணமனுமதிக்குஞ் சுதந்தரம் சட்ட நிரூபண சபைக் களிக்கப்பட்டதினால், இப்பாலத்தையிடுவிக்கும் பொறுப்பு ஸ்ரீமான் வை. துரைசுவாமியவர்கள் மேலாயிற்று. ஆனால் இவர் இப் பண்ணைப்பாலத்தை யிடுவிக்காது வேலணைக்கும் அராலிக்குமிடையிற் பாலமிடுதல்தான் தீவுவாசிகளுக்கு வசதியானதென்றும், ஆதலின் அதுவே அவசியம் இடப்படுதல் வேண்டுமென்றும் சட்ட சபையில் வாதாடி, யாழ்ப்பாணத்தின் மற்றைய பிரதிநிதிகளினுதவியுடன் அராலிப்பாலமிடுதற்கு அரசினரை இரண்டரைலஷ ரூபா அனுமதிக்கச் செய்தனர்.

ஆனல் இதற்கிடையில் யாழ்ப்பாணத்துக்கும் பூநகரிக்கும், வேலணைக்கும் புங்குடுதீவுக்கும் பாலங்கள் வேண்டுமென்ற கிளர்ச்சி யுண்டாகி, யாழ்ப்பாணப் பகுதிப் பிரதிநிதி பூநகரிப்பால மவசியம் வேண்டுமென வற்புறுத்தியதால் அராலிப்பாலவேலை நிறுத்தப்பட்டு விட்டது. இதுபற்றிக் கவர்ன்மென்டாருக் கெழுதிய விண்ணப்பங்கட் கெல்லாம் அவர்கள் தாங்களிக்கருமத்திற் பிரவேசிக்க முடியாதென்றும், சனப் பிரதிநிதிகள் பெரும்பாலோரின் எண்ணப்படியே இனி இவ்வித வேலைகள் நடைபெற வேண்டுமென்றும் கூறிவிட்டனர்.

ஆதலால் பண்ணைப்பால மவசியம் வேண்டுமென்பவர்கள் தீவுப் பகுதியின் பிரதிநிதியைக் கொண்டு அதனை நிறைவேறச் செய்தல் வேண்டும். அல்லது இனிவரும் தேர்தலில் அவ்விதம் செய்யக்கூடிய ஒருவரையே பிரதிநிதியாகத் தேர்ந்தனுப்ப வேண்டும். அத்துடன் தேசத்தில் இதனைப்பற்றிப் பிரசாரஞ் செய்து ஏனைய பிரதிநிதிகளு மிதற் குதவிபுரியுமாறு செய்தல் வேண்டும்.

பண்ணைப் பாலத்தால் தீவுநாட்டார்க்கு மாத்திரமல்ல, யாழ்ப்பாண நகர்வாசிகளுக்கும பெருத்த நன்மை யுண்டாக விடமிருக்கிறது: யாழ்ப்பாணம் குடிநெருக்கத்தால் சுகாதாரமற்றதாயும், விஸ்தாரமாக்குதற்கு இடமற்றதாயு மிருக்கின்றது. இப்பாலம் கட்டி முடிந்தால் மண்டைதீவு யாழ்ப்பாண நகரத்தின் ஓர் பாகமாயமைந்து, கப்பற் துறைமுகம் முதலிய வசதிகளையு முடையதாயிருக்கும். அரசினர் மனங்கொண்டு புதிய நகர நிர்மாணமுறையில் கட்டிடங்கள், தெரு வீதிகள் உத்தியோகஸ்தானங்கள் முதலியவற்றையமைத்து, தற்போது யாழ்ப்பாண ரேகுவுக்குவரும் புகையிரதப் பாதையையும் மண்டைதீவுக்குத் தொடுத்துவிட்டால், மண்டைதீவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வருங் காலத்தில் அளவற்ற நன்மைகளேற்படுமென்பது திண்ணம். மண்டைதீவை இலங்கையின் பம்பாயென்றும் கூறக்கூடியதாகும். சென்னைக்கும் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கூடாகச் செல்லும் ஆகாயரதப் போக்குவரத்து சில வருடங்களா லேற்படும்போது யாழ்ப்பாணத்தில் ஆகாயாதந் தங்குமிட மமைத்தற்கு மண்டைதீவிலேயே விசாலமான சமவெளிகளிருக்கின்றன.

பண்ணைப்பாலத்துக்காகப் பிரசாரஞ் செய்பவர்களுக்கும் உதவி செய்பவர்களுக்கும் ஊக்கமளிப்பதற்காக இப்பாலத்தைப் பற்றிய சம்பவங்களையும் இப்பாலம் வேண்டியதற்கான நியாயங்களையும் என் சிற்றறிவிற் கெட்டியவரையில் கும்மியாகச் செய்திருக்கிறேன். இதிற் குற்றங்கள் காணப்படின் அறிஞர் திருத்திக்கொள்க.

மண்டைதீவு. சி. அகிலேஸ்வரசர்மா.

பரமபதி துணை

# பண்ணைப்பாலக் கும்மி.

## கடவுள் காப்பு.

(காரண மாகுந்தெய்வ என்ற வர்ணமெட்டு.)

ஆரணம் யாவும்போற்றும் காரண மானதேவா
ஐயனே காத்தருள்வாய்
அடியனேன்முகம்
மெய்யனே பார்த்தருள்வாய்
ஆதிபராபர சோதிபுரீஸ்வர
ஆதரவாகவே யானொருகதைசொல (ஐய)

## கும்மி

ஆயிரத் தெண்ணூற்றி யெண்பத்தி மூன்றும்
ஆண்டினில் யாழ்ப்பாண மாநகரின்
நாயக மாயதோர் பாலத்தைப் பற்றி
நடந்த சரித்திரம் கேளுமடி 1

தக்க வனுபவ சாலியென் றேயிந்தத்
தாரணி யோர்புக ழேஜண்டராய்
பக்குவஞ் சேர்உவில்லியம் ருவைனம்ந கர்பரி
பாலனஞ் செய்தனர் பாருமடி. 2

அக்காலந் தன்னிலே ருவைனந்து ரையர
சாட்சி முறையினி லாலோசித்தே
எக்கால மும்மழி யாநன்மை யொன்றை
இயற்றத் துணிந்தனர் பாருமடி. 3

தீவுப் பகுதியை யாழ்ப்பாணத் தோடே
சேர்த்திணைத் துப்பாலங் கட்டிவிட்டால்
காவிச் சுமக்கின்ற தீவுநாட் டார்க்குநற்
காலம் வருமென்றார் பாருமடி. 4

யாழ்ப்பாணக் கஸ்றம்சி னெல்லைதொ டங்கியே
நாடுஞ் சிறுத்தீவைத் தானொருநத்து
வாய்ப்பான றோட்டொன்று நீட்டிவிட் டாற்சுக
மார்க்கமென் றார்துரை பாருமடி. 5

சொல்லுஞ்சி றுத்தீவு தன்னுடன் தெற்கே
தோற்றுமண் டைதீவைத் தானொருடுத்தே
நல்ல தொருகோஸ்வே கட்டிவிட் டாற்றேச
நன்மையென் றுன்னினர் பாருமடி. 6

இந்தக் கருத்தை யந்நாளி லிருந்த
இஞ்சிநீ யர்உவாயன் றன்னுடனே
அந்தத்து ரைமகன் மெத்தக்கா லங்கூடி
ஆலோச னைசெய்தான் பாருமடி. 7

இஞ்சிநீ யர்உவாயன் றன்னுடன் ருவைனத்தின்
எண்ண மு மொத்தேயி ருந்ததனல்
கொஞ்சமுந் தாமதி யாமல்றிப் போட்டொன்று
குறிக்கத் தொடக்கினர் பாருமடி. 8

ஐம்பதி னாயிரம் ரூபாசெ லவுதான்
ஆசவி தற்குள்ள தேவையென்றே
இம்பரில் எஸ்றிமேற் போட்டொரு றிப்போட்
எழுதி முடித்தனர் பாருமடி. 9

அந்தறிப் போட்டைத் தேசாதி பதிக்கே
அனுப்பிவிட் டாரங்கீ காரம்பெற
இந்தச் செலவிற்கு இப்போ பணமொன்றும்
இல்லையென் றூர்கவர்னர் பாருமடி. 10

தேசநன் மைக்காக ருவைனந்து ரைசெய்த
தீர்மானந் தன்னை நிறைவேற்றப்
பேசும்யாழ்ப் பாணப் பிரபும கர்சிலர்
பிரியங்கொண் டாரிதைக் கேளுமடி. 11

எந்தக் கவர்னர்க ளிங்குவந் தாலும்
இந்தக்கோஸ் வேகட்ட வேண்டுமென்றே
வந்தித்து பசாரப் பத்திரங் கொண்டு
வரைந்துகேட் டாரிதைப் பாருமடி. 12

பண்ணைக் கடலைக் கவர்னர் துரைமார்
பலமுறை யும்வந்து பார்த்துச்சென்றே
எண்ணிக்கை யாய்வில்யம் ருவைனத்தின் பாதையை
ஏற்றுக்கொண் டாரின்னுங் கேளுமடி. 13

காரியம் நல்லதென் றேதுரை மார்பாலங்
கட்டக்க வுன்சிலில் யோசித்துமே
சீரிய றிறெஷரர் காசில்லை யென்றதாற்
செய்யப்பின் போட்டனர் பாருமடி. 14

தீவுநாட் டார்தமக் கானகு றைகளைத்
தீர்த்துக்கொள் ளக்கவர்ன் மென்றாரிடம்
மேவும் பிரதிநிதியென் றொருவரை
வேண்டிக்கொண் டாரிதைக் கேளுமடி. 15

இருபத்தொ ராமாண்டு ஏப்பிறில் மாசத்தில்
அத்தீவு நாட்டாரின் மெம்பராகத்
தெரிபட்டா ராம்ஸ்ரீமான் துரைசுவாமி யென்ற
செல்வப்பிர புமகான் பாருமடி. 16

சொந்தவூர் தன்னுடன் வேலணை தன்னைத்
தொடுக்கத் துணிந்தார் துரைமகனார்
எந்தவூர் கெட்டாலுந் தம்மூர் சிறக்கவென்
றெண்ணினார் போலும்நீர் கேளுமடி. 17

தேடும ராலித் திருநகர் தன்னுடன்
தீவுப் பகுதியைச் சேர்த்திணைத்தால்
ஆருஞ் சுகமாய் நடக்கலா மாமிதை
ஆலோ சனைசெய்து பாருமடி. 18

பட்டினங் கெட்ட விடமா மேயங்கே
பானைசட் டியொன்றுங் கிடையாதாம்
கிட்டியே சங்கானைச் சந்தையிற் சென்றாற்
கிடைத்திடு மாம்விலை கேளுமடி. 19

வட்டுக் கோட்டை யராலியார்க் கெல்லாம்
வசதியா யுள்ளது வேலணையாம்
பட்டினத் தாருக்கிங் கலுவலில் லையென்று
பகருவார் போலும்நீர் பாருமடி. 20

புங்குடு தீவு நயினையார்க்கெல்லாம்
போக்கு வரவிற்குக் கிட்டியதாம்
அங்கது மெய்யானால் அத்தீவு நாட்டிற்போய்
அராலி சமீபமோ பாருமடி. 21

பத்தொடு மூன்று மைலா மேராலி
பண்ணைத்து றையெட்டு மைல்தானே
இத்துணை யெண்ணிக்கை வேலணை யாந்துறை
யெல்லை யிருந்துநீர் பாருமடி. 22

மோட்டார்ர தமேறிப் பவனிசெல் வார்க்கே
மூன்று மைல்தூர மரைநிமிஷம்
காட்டுக்குள் ளாலே நடந்துசெல் வாருக்குக்
காதவ ழியன்றோ கேளுமடி. 23

பாயுமல் லெபட்டி கடகஞ் சுமந்து
பட்டினத் தில்விற்கு மேழைகட்கு
நேயமாய் ராலியைச் சுற்றி வலம்வர
நேர்ந்திக் கடனுண்டோ? கேளுமடி. 24

காரை நகர்க்குமூர் காவற்று றைக்கும்
கட்டியுள் ளபாலம் போதாதோ?
நேரே கிழக்கேயோர் பாலம்வேண் டுமென்றால்
நெஞ்சுது டிப்பதேன்? கேளுமடி. 25

மன்னன்ரு வைனத்தின் தீர்மான மும்போச்சே
மண்டைதீ வோடல்லைப் பிட்டியும்போச்சே
சின்னஞ் சிறியவூ ரெக்கேடு கெட்டாலுந்
தீமை வருமோ! நீர் கேளுமடி. 26

மன்னுதீ வாருக்கே பாலமியாழ்ப் பாண
வாசிகட் கேனென்று கேட்பாரேல்
முன்னமேற் குநாட்டார்க் காகவே ராலி
முடிபுசெய் தார்போலும் பாருமடி. 27

வலிகாமம் மேற்கு மணியகா ரன்றனை
வாழ்த்தவேண்டு மொரு சொல்லுக்காக
தலியாமற் பண்ணைக்கே பாலங்கட் டவேணும
ராலிக்கே னென்றாராம் பாருமடி. 28

எல்லாருங் கூடியே சம்மதங் கூறி
எடுத்து நிறுத்திக் கவுன்சிலில் விட்டால்
பொல்லாத பேருக்காய்ப் பாடுப டமாட்டேன்
போய்வாரு மென்பாரோ? கேளுமடி. 29

சின்னவூ ரென்றேய லட்சியஞ் செய்கிறீர்
சேரா தொருவோட் குறையுமானால்
என்னென்று நீர்சட்ட சபைமெம்ப ராவீரென்
றின்பமாய்க் கூப்பிட்டுக் கேளுமடி. 30

நடுவு நிலைமை சிறந்தவ ராம்மேலாம்
நியாயது ரந்தர ரென்றிருந்தோம்
கொடுமையா யெம்மைப் புறக்கணித் தாரென்று
குழறுஞ் சனங்களைக் கேளுமடி. 31

எங்கள்நாட்டிற்குறை தீருமென் றேதீவார்
எண்ணியி ருந்தேயே மாந்துபோதல்
மங்கள மார்துரை சாமியா ருக்கிது
மனுநீதி யாகுமோ? கேளுமடி. 32

நாமோர் பெரியாரை வீணே குறைகூற
நாவெழு மோ? மட நாரியரே
ஏனிவ ரெம்மைப் புறக்கணித் தாரென்று
ஏங்கி யழுகிறேம் பாருமடி. 33

பட்டினத் திற்கே சமீபமா யுள்ளதும்
பல்லாயி ரம்பேர் போவதும்வருவதும்
திட்டமு டனெல்லா வூராரு மொன்ருய்ச்
சேருவ தும்பண்ணை பாருமடி. 34

நாடும்றெய்ல் வேஸ்றேஷன் கச்சேரி ஷாப்பு
நல்லபொ லிஸ்ரேஷன் டிஸ்திரிக்கோட்டு
வீடுபல் லாங்கிலக் கல்லூரி கள்யாவும்
விளங்கு மிடமெது? கேளுமடி. 35

செட்டி கடைகள் டிஸ்பென் சரிகள்
சேமநி திவங்குச் சாலைகளும்
இட்டமு றும்பல வைத்தியர் குழாங்களும்
இருக்கு மிடமெது? கேளுமடி. 36

மிக்கசி வாலயம் வைஷ்ணவ ஆலயம்
மேன்மைதி கழ்நல்லூர்க் கந்தர்கோயில்
தக்ககி றீஸ்தவ சேட்சுக்க ளெல்லாம்
தங்குமி டமெது கேளுமடி. 37

நாட்டிலோ நகரிலோ தேவைய திகம்?
நாடுமெத் தீவிற்ச னங்களுக்கும்
கூட்டும ராலியிற் றீவார்போ யங்கே
கொள்ளும் பொருளெது? கேளுமடி. 38

ஏழாயி ரம்ருபா குத்தகை யாம்பண்ணை
ஏற்றவ ராலிநா னூறுரூபா
தாளாது யாழ்ப்பாணத் திறைசேரி யிற்போனல்
தவருமற் காட்டுவர் பாருமடி. 39

யாழ்ப்பாணற் றவுனுக்கும் பிரதிநி தியாம்
நல்ல வொனறபிள் கனரத்னம்
கேட்பாரோ பண்ணையின் முறைப்பாடு தன்னைக்
கிட்டவி ருக்கிறார் கேளுமடி. 40

பத்தாயி ரம்ருபா வருஷச்செ லவாமே
பண்ணைக் கடல்வாய்க்கால் வெட்டுதற்கே
புத்திசொன் னலென்ன? கவர்ன்மென்டாருக்கிவர்
பொதுமெம்ப ரல்லவோ? கேளுமடி. 41

நாடும்றெக் கிளமேஷன் றேட்டிலி ருந்து
நல்லசி றுத்தீவைத் தான்றெடுத்தால்
தேடும்பத் தாயிர மெத்தனை மிச்சம்?
செலவுஞ்சு ருக்கமே பாருமடி. 42

எந்தவி தமிவர் புறக்கணித் தாலும்
இவரைநாங் கள்விட மாட்டோமென்றே
சொந்தம்போல் மண்டைதீ வார்சிலர் கௌரவ
துரைசாமி யாரிடம் சென்றாரடி. 43

அப்பொழு தங்கவர் வந்தக ருமத்தை
அன்பாய்மு றைப்பட்டு நிற்கையிலே
துப்பர வாகத்து ரைசாமி யார்சொன்ன
சுந்தர வாசகம் கேளுமடி. 44

உங்களுக் கும்பாலம் வாங்கித்த ரலாம்
உந்தவ ராலிமு டியட்டுமேன்
திங்களுக் கோர்முறை பெற்றீச வெழுதுங்கள்
செய்விக்க லாமென்றார் பாருமடி. 45

முந்திந டப்பது ராலிப்பா லம்நீர்
மூடத் தனமா யுலையாதீர்
பிந்திச்சி லாண்டின்மேற் பண்ணையைப் பற்றிப்
பேசுவோ மென்றாராம் பாருமடி. 46

பிள்ளையைத் தாய்மார் பிரியும்பொ ழுதந்தப்
பிள்ளையழு தாலழா தேயுனக்குப்
பல்விமுட் டைவாங்கித் தாறேன் றுற்போலப்
பாவிக்க லாமிதைக் கேளுமடி. 47

போதாது போதாது கவர்மென்டி லேபணம்
புதுவேலை யொன்றும்மு டியாதென
வாதாடும் போதிலி ரண்டுபா லமிவர்
வாங்கித் தருவாரோ? கேளுமடி. 48

இக்கதை யிவ்வா றிருக்கமண் டைதீவில்
எச்சாதி யாருமோர் சபைகூடியே
தக்க விருவரைப் பிரதி நிதியாகத்
தங்களுக் காக்கினர் பாருமடி. 49

வந்த பிரதி நிதிகளி யாரென்னில்
வ்வா தரந் தோணியு டன்மகாளும்
இந்துக்கல் லூரிமுன் செல்வத்து ரைப்பிள்ளை
என்பவர் தஞ்செயல் கேளுமடி. 50

கச்சேரி யிற்கவர்ன்மென்ட் ஏஜென்ட ரைக்கண்டு
காரியந் தன்னைவிண் ணப்பஞ்செய
இச்சார்பு பற்றியே ஏஜன்டர் சொன்ன
இன்ப வசனத்தைக் கேளுமடி. 51

புங்குடு தீவார்க்க ராலியோ பண்ணையோ
போகவ ரச்சுக மானதென்றே
நன்கறிந் தல்லவோ உங்களுக் குப்பதில்
நவிலவே ணுமென்றூர் பாருமடி. 52

மண்டைதீ வல்லைப் பிட்டிமண் கும்பான்
வாசிகள் புங்குடு தீவிற்சென்று
கொண்டாடி யங்குள்ள கோமான்க ளைக்கண்டு
கூறிய வாசகம் கேளுமடி. 53

எங்கள் சகோதர நாட்டாரென் றேயும்மை
எப்பொழு தும்மதித் துள்ளோம்யாம்
உங்கள்பொ துநன்மைக் கானவற் றில்நாளும்
ஒத்துழைப் போமென்றூர் பாருமடி. 54

பண்ணையோ ராலியோ உங்களுக் குச்சுகம்
 பட்டினப் போக்கு வரவுக்கெனத்
திண்ணமா யெங்கட்க ராலிவேண் டாம்பண்ணை
 தேவையென் ருர்பின்னுங் கேளுமடி. 55

நாங்களிப் போதெங்கள் பாலமே கேட்கிரும்
 நாடிய துகிட்டா விட்டாற்பின்னர்
நீங்கள்சொல் லும்பண்ணைப் பாலத்தை யேநாமும்
 நேரேகேட் போமென்ருர் பாருமடி. 56

இந்தவி தமாயவ் வூராரி னெண்ணத்தை
 எடுத்துச்சொன் னீரோஇல் லேயோ? என்று
பிந்திக் கிராமத் தலைவர் பசுபதிப்
 பிள்ளையைச் சத்தியங் கேளுமடி. 57

சென்ற விருபதோ டாருமாண் டிங்கே
 சேர் கிளிவ் வோட்மன்னர் வந்தபோது
என்றும் மறவா தவர்க்கொரு அற்றிறஸ்
 எழுத முயன்றனர் பாருமடி. 58

சென்றற் கொலீஜி னதிபரு டன்கனம்
 செல்வத்து ரைப்பிள்ளை காலம்போன
நன்றிசேர் அற்வற்கேற் கனக சபையிவர்
 நற்சமு கஞ்செய்தார் பாருமடி. 59

இந்தம கான்களே பண்ணைக் கடற்பாலம்
 எங்கட் கவசியம் வேண்டுமென்று
வந்தனஞ் சேருப சாரலி கிதத்தில்
 வரையத் தொடங்கினர் பாருமடி. 60

அப்போதும் சிற்சில ஒனறபிள் மெம்பர்கள்
 அராலியைத் தான்நீட்ட வேண்டுமென்று
மெய்ப்பாடு பட்டுத் தடுக்க முயன்ருராம்
 மேன்மைதானே? இது கேளுமடி. 61

ஆர்தடுத் தாலுமென் னந்தப் பிரபுக்கள்
 அற்றிறசிற் பண்ணையைத் நீட்டிவிட்டார்
சேர்.கிளிவ் வோட்மன்னர் மாற்றிதற் குச்சொன்ன
 சித்திர வாசகங் கேளுமடி. 62

புன்குடு தீவும ராலியும் பண்ணையும்
பூநக ரியாரும் பாலமேகேட்பதால்
இங்கிது நாலில வசிய மானதொன்
றேற்றுக்கொள் வேமென்றார் பாருமடி. 63

பாலம ராலிக்கோ பண்ணைக்கோ என்று
பலசன சம்மதங் கேட்போமென
கோலமார் யாழ்ப்பாணக் கொம்மிற்றி யாரொரு
கூட்டங் குழுமினர் பாருமடி. 64

அச்சபை தன்னில் நடுநா யகமாய்
அமர்ந்தன ராம்ராச ரத்னமென
இச்சகங் கொண்டாடும் ஒனறபீள் மெம்பர்
இவர்தஞ் செயல்பின்னர்க் கேளுமடி. 65

கூட்டத்தி னங்கத்தோர் நாமதே யந்தன்னைக்
குறிப்பிட மெம்மால் முடியாது
நாட்டங்கொள் அற்வக்கேற் நல்லையா வேமுதல்
நன்மக்க ளாமிவர் பாருமடி. 66

பொன்னாலே செய்த மலர்க்கு நறுமணம்
புகுந்தவா றே ரீ. ஆர். நல்லையாவும்
எந்நாளும் நல்லையா என்றாரார் யாவரும்
ஏத்தவைத் தாரிதைப் பாருமடி. 67

எல்லாருமராலியென் றெடுப்புக்கொ ளும்போதில்
எங்கள் துரைரத்தினம் நல்லையாவே
நல்லாய்ப்பண்ணைக்கோஸ்வே வேண்டுமென் றேநியாய
நாட்டிவிட் டார்பின்னர்ப் பாருமடி. 68

மத்திய கல்லூரி யாசிரி யர்முதல்
மற்றைய நியாயது ரந்தரரும்
இத்துடன் நியாயம் விளங்கிக்கொண் டார்பின்பு
என்னசெய் தாரென்று கேளுமடி. 69

சம்மதங் கூறிடும் போதினி லேயந்தத்
தக்க துரைமக்கள் சங்கத்திலே
விம்மித மாயாறு பேர்தான ராலியை
விரும்பி நின்றாராம் பாருமடி. 70

எண்ணிக்கண் டதொகை யிருபதொ ருமெம்பர்ஸ்
இந்தப் பண்ணைக்கோஸ்வே வேண்டுமென்றார்
கண்ணைப்பொத் திநியாயம் பேசின ராம்சிலர்
கண்மூடிக் கொண்டாராம் பாருமடி. 71

சங்கத் தலைவரும ராலிபெ யிலாகச்
சந்தோஷ மின்றித்த லைகுனிந்தே
உங்கள்வெற் றிப்பாட்டைக் கவுன்சிலி லேபோய்
உடைக்கிறே மென்றாராம் பாருமடி. 72

என்ன வெகுளி! சனத்தலை வர்க்கிந்த
ஏழைப்பண் ணைசெய்த குற்றமென்ன?
முன்னம ராலிமு தல்வரோ டேயிவர்
முழுதும்பின் தொடர்வதேன்? கேளுமடி 73

யாழ்ப்பாணச் சங்க லிகிதரு மங்கே
நடந்தவற் றைத்தந்தி மூலமாக
காப்பாற்று மெங்கள் கவர்னர் துரைக்கே
கடித மனுப்பினர் பாருமடி. 74

இந்தமு றையாக யாழ்ப்பாணம் கொக்குவில்
இன்பமுள் ளவண்ணார் பண்ணையிலும்
கொந்தளிப் பாகவே கூட்டங்கூ டித்தந்தி
கொடுத்தார் கவர்னர்க்குப் பாருமடி. 75

வண்ணார் பண்ணையில் வாழும்முஸ் லீம்கள்
மண்கும்பா னிற்பள்ளி வாசலுக்கே
திண்மையாய்ப் பண்ணைதான் போகவ ரமெத்தத்
தேவையென் றாரின்னும் கேளுமடி. 76

கொக்குவி லில்வாழும் புகையிலை வியாபாரக்
கொம்பனி யார்தீவு நாட்டிற்சென்று
பக்குவ மாகவே சிப்பங்கொண் டுவரப்
பண்ணைவேண் டுமென்றார் பாருமடி. 77

முந்திக் கரையூரில் வாழும் பரதவர்
முச்கிய மாய்க்குடி யேறவென்றே
சிந்தித் திருப்பது மண்டைதீ வின்கரை
தெற்குப்பண் ணையென்றார் பாருமடி. 78

நாரந்த னையோடு வேலணை தன்னிலும்
நயினார் தீவல்லைப் பிட்டியிலும்
ஆரம்ப மாகியே கூட்டங்கூ டித்தந்தி
அடித்தார்க வர்னர்க்குப் பாருமடி. 79

புன்குடு தீவார் தங்கரு மம்பார்க்கப்
போயிருக் கின்றாரி தொன்றும்வேண் டாமென்று
அங்கவர் காரியங் கைக்கூடி னுமிப்போ
அதிஷ்டமுண் டோவென்று பாருமடி. 80

தீவுகள் யாழ்ப்பாணத் தோடிணைத் தாலன்றிச்
சீர்திருத் தம்பெற மாட்டாவே
ஆவல்கொள் புன்குடு தீவுநாட் டாரிதை
அறியா திருக்கிறார் பாருமடி. 81

தந்தைவெ றுத்தாலு மறிவுள்ள மைந்தர்கள்
தாம்வெறுக் காரந்தத் தன்மையைப்போல்
பிந்தியுங் கௌரவ துரைசாமி யாரிடம்
பேசச்சென் றார்சிலர் பாருமடி. 82

மண்டைதீ வல்லைப் பிட்டி யுடையார்
மற்றுஞ் சிலமுதி யோருடன் சென்று
தெண்டனிட் டுஸ்ரீமான் துரைசாமி யாருக்குச்
செய்தவிண் ணப்பத்தைக் கேளுமடி. 83

ஐயாவே நாங்க ளுமக்கென் குறைசெய்தோம்?
அறியாம லோர்பிழை செய்தாலும்
மெய்யாகப் பெரியார் பொறுத்தல் கடனென்று
விண்ணப்பித் தார்பின்னுங் கேளுமடி. 84

எத்தீவு நாட்டாரு முமக்கே யுரியவர்
எங்களை யேன்புறம் பாக்குகிறீர்
ஒத்தேயெல் லாருமொ ரேபாலத் தாற்சென்றால்
உமக்கே புகழென்றார் பாருமடி. 85

எல்லாருக் குஞ்சுகம் பண்ணைப்பா லந்தானே
எங்களுக் கும்மதே வேண்டுமையா!
வல்லாண்மை யோடுக வுன்சிலி லேபேசி
வாங்கித்தா ருமென்றார் பாருமடி. 86

அன்னபொ ழுதினில் ராசரத் னம்என்ற
அடுத்த ஒனறபிள் மெம்பருமே
தன்னலு வலாக வந்திருந் தாரங்கே
சாட்சி யவர்தானும் கேளுமடி. 87

ஆதியி லேகூடி ராலியைத் தானே
ஆயத்தஞ் செய்துள்ளே மாதலினால்
யாதுமி னியதை மாறமு டியாது
நாமென்செய் வேமென்றார் பாருமடி. 88

என்னசெய் வாரிதைக் கேட்டம னுஷர்கள்
ஏங்கிப்பெ ருமூச்சு விட்டவராய்
மன்னுமண் கும்பானிற் பிள்ளையார் உண்டேல்
வருமேபண் ணையென்றார் பாருமடி. 89

என்றிவர் கூறிய போதினி லங்கொரு
எண்ணங்கொண் டேதுரை சாமியாரும்
நன்றுநீர் கூறிய வாறோர் கருமம்
நடத்திப்பார்ப் பேமென்றார் பாருமடி. 90

தேடும ராலிக்கும் பண்ணைக்கும் புன்குடு
தீவிற்கும் பூநக ரிக்குமாக
நாடுந் திருவுளச் சீட்டிட்ட தின்படி
நடத்துவே மென்றாராம் பாருமடி. 91

மெத்தச் சலாமையா மெத்தச் சலாம்நீர்
விரும்பிய வாறுசெய் வீரென்னவே
ஒத்தம னதுட னேதுரை சாமியார்
ஒன்றுசெய் தாராம் கேளுமடி. 92

நான்குபா லப்பெயர் தீட்டியுள் ளவந்த
நல்லதி ருவுளச் சீட்டு களைக்
கோன்கரு ணைத்துரை சாமியா ரிட்டுக்
குலுக்கினா ராமிதைப் பாருமடி. 93

குலுக்குந் திருவுள்ளச் சீட்டுநான் கினுள்ளும்
குறிக்காம லொன்றையெ டுப்பீரென்ன
சலிக்காமல் ராசரத் தினம்என்ற மகான்
தானெடுத் தாராம் பாருமடி. 94

வேண்டுவார் வேண்டுவ தீந்ததரு ளும்அந்த
விக்னேஸ்வ ரப்பெரு மானருளால்
நீண்டதி ருவுளச் சீட்டுப்பண் ணையென
நேராய்த்து வக்கிற்றாம்! பாருமடி. 95

கண்டார் திருவுளக் கட்டளை தன்னைக்
கடக்கமு டியாதி னிமேலென்று
கொண்டாடும் பண்ணையின் கோஸ்வேயைப் பற்றிக்
குறிப்பிடு வேமென்றார் பாருமடி. 96

ஈஸ்வர சங்கற்பந் தன்னைநி னைந்தினி
எங்களுக் கும்பால மாகுமென்று
நேசமு டன்விடை பெற்றுச்சென் றாரையம்
நீங்கியி ருந்தாராம் பாருமடி. 97

தீவுநா டென்கின்ற பெண்பிள்ளை யாழ்ப்பாண
நேசமாப் பிள்ளையைக் காதலிக்க
பாவம ராலியென் றொருவன்வந் தப்பெண்ணைப்
பலவந்தஞ் செய்கிறான் பாருமடி. 98

பெண்விரும் பாதசு வியாண மெல்லாம்
பெருந்தொந் தரவுக்கு ளாகுமென
கண்ணிய மாய்முன்னோர் சுயம்வரம் நாட்டிய
காரணத் தையுற்றுப் பாருமடி. 99

காட்டுந் திருவுளக் கட்டளை தன்னைக்
கண்ணாரக் கண்டும் கவுன்சில்மெம்பர்ஸ்
மீட்டும ராலிதான் வேண்டுமென் றேசண்ட
வேகங்கொண் டாரிதைப் பாருமடி. 100

போலிம னிதரை யேமாற்றி னாலும்
போற்றுந்தெய் வத்தைய ணுப்பலாமோ
கேலிசெய் தாலுமென் திருவுள்ளந் தானிதைக்
கேட்கும்ந மக்கென்ன பாருமடி. 101

ஒன்பது பேர்கூடி யோசிக்குஞ் சங்கம்
ஒன்றுள தாமக் கவுன்சிலிலே
இன்பமு டனந்தச் சங்கத்தி லேயிவர்
என்னசெய் தாரென்று கேளுமடி. 102

கூறும ராலிதான் கட்டவேண் டுமென்று
    கொண்டுவந் தார்நியாயம் ராசரெத்தினம்
தாறுமா றுகவே தர்க்கம்ந டத்தினர்
    சங்கதி கழ்ச்சியைக் கேளுமடி. 103

காலங்கண் டுள்ளவ னுபவ சாலியாம்
    கௌரவ பிறீமன்து ரையனேக
பாலங்கண் டுள்ளார்ஐ ரோப்ய சிகாமணி
    பண்ணைக்கா கநின்றார் பாருமடி. 104

ஏஜண்ட ராய்நா மிருக்கும் பொழுது
    யாழ்ப்பாணத் துக்கான நன்மைகளுள்
தேசம்பு கழ்பண்ணைப் பாலம்ஒன் றேயென்று
    தீர்மானித் தேமென்றார் பாருமடி. 105

சிங்கள மெம்பர்ஸ் எல்லாரு மோர்பக்கஞ்
    சேர்ந்தனர் கௌரவ பிறீமன்துரை
அங்கொரு வர்சொன்ன நியாயம் தனியே
    அரங்கேறு மோ? பின்பு பாருமடி. 106

கவுரவ மெம்பர்ஸ் எல்லாருங் கூடி
    கட்டாயம ராலியென் றொப்புக்கொண்டே
அவரவர் எண்ணத்தைக் கவர்னர் துரைக்கே
    அறிக்கையிட் டாராம் பாருமடி. 107

நல்ல ஒனறபிள் கன்னங்க ராவொடு
    நாட்டும்பு கழ்த்தம்பி முத்துவுமாய்
வெல்லுங்க ருமமொன் றிற்காக யாழ்ப்பாணம்
    விருந்துஹொட் டல்வந்தார் பாருமடி. 108

பாவமே ழைமக்க ளானதீ வுநாட்டார்
    பண்ணைப்பா லம்பெற வேண்டுமென்று
ஆவல்மி கக்கொண்டு கன்னங்க ராவையும்
    அடைந்துமன் றடினர் பாருமடி. 109

அப்போ தங்கவர் பக்கத்திற் பண்ணையை
    அனுதாப மாய்வந்து பார்வையிட்டு
எப்போதும் யாழ்ப்பாணத் திற்கேச மீபமாம்
    இதுவே சுகமென்றார் பாருமடி. 110

நாங்களென் னசெய்வேம் யாழ்ப்பாணத் துங்கள்
நாலு பிரதிநி திகளுமொன்ருய்த்
தேங்கிய ராலியைத் தீர்த்துக்கொண்ட டாரினிச்
செய்வதென் னே? வென்ருர் பாருமடி. 111

ஆனலு மந்தப்பி ரபுகன் னங்கரா
அங்கேபோய் நாஷனல் காங்கிரசில்
நானேபோய்ப் பார்த்தேன்பண் ணேதா னேசுகம
ராலிவேண் டாமென்ருர் பாருமடி. 112

நாஷனல் காங்கிரசில் பண்ணையென் றேயிவர்
நல்லதோர் நிர்ணயங் கொண்டுவந்தார்
பாஷைவே ருமனய நாட்டாரென் ருலும்
பாஸ்பண்ணி னூர்நீதி பாருமடி. 113

பண்ணைக்கும ராலிக்கு மெதிராக வேயிரு
பக்கமெ மோறியல் சென்றதனல்
எண்ணிக்கை யாயெது நல்லவி டமென
எண்ணின ராங்கவர்னர் பாருமடி. 114

யாழ்ப்பாணந் தன்னுடன் தீவையி ணைக்க
ராலியோ பண்ணையோ நல்லதென
வாய்ப்பான கச்சேரி ஏஜண்டர்க் குத்தந்தி
வரைந்துவிட் டார்கவர்னர் பாருமடி. 115

சந்தோஷ மாயாரும் பிரயாணஞ் செய்யத்
தக்கவி டம்பண்ணைப் பாதையென்றே
நந்தேச மன்னர்க்கு றிப்போட் அனுப்பினூர்
யாழ்ப்பாண ஏஜன்டர் பாருமடி. 116

மற்றிதற் குப்பின்பு ராலியோ பண்ணையோ
மட்டாய்ச் செலவுசு ருக்கமென
முற்றறிந் துசொலக் கவர்னரிஞ் சினியர்
மூதல்வர்க் கறிவித்தார் பாருமடி. 117

பண்ணைக் கடலைப் பலமுறை யாகப்
பகிரங்க வேலைப் பகுதியாரும்
எண்ணைப் பெருக்கி யளந்துபோ னூர்செய்தி
இன்னுந்தெ ரியாது பாருமடி. 118

பின்னுமொ ருகதை பிறந்திருக் கின்றது
    பெரும்புற வாழியாம்! பண்ணைக்கடல்
அன்னதி லேபாலங் கட்டிவிட் டாற்புயல்
    அடித்தா லழிக்குமாம்! பாருமடி. 119

ஒல்லாந்தர் காலத்து வெட்டுவாய்க் காலதில்
    உள்ளமண் பிட்டியே சாட்சிசொலும்
சல்லாப மாய்வரு மிஞ்சிநீ யர்க்கது
    சமுத்திர மாயிற்றும்! பாருமடி. 120

எல்லாத் துரைமாரி னெண்ணப் படியே
    இஞ்சிநீ யர்யாரு மொத்துவந்தார்
சொல்லாள ராயாரு மொத்தேய ராலியைத்
    தூக்கிவிட் டாராம் பாருமடி. 121

பகிரங்க வேலையா லோசனைச் சங்கத்தில்
    பாஸ்பண்ணி ஞராம ராலியென்றே
புகாரிரண்டு லட்சத் தைம்பதி னுயிரம்
    போட்டாராம் எஸ்றிமேற் பாருமடி. 122

ரொக்கம திப்பினில் நாற்பதி னுயிரம்
    ரூபாவெ டுத்தாராம ராலிக்கென்று
மிக்கவே கமாக இஞ்சிநீ யர்யாரும்
    வேலைதொ டங்கினர் பாருமடி. 123

இந்தச்ச மாச்சாரம் தீவுயாழ்ப் பாணம்
    எங்கணுஞ் சென்று பரவியதால்
அந்தலண் டன்னநகர் சிலோன்மந் திரிக்கே
    அனுப்பினர் விண்ணப்பம் பாருமடி. 124

நீங்கள் கவர்மென்டை நம்பாம லேயுங்கள்
    நியாயம்பே சும்பிரதி நிதிகள்தமை
வாங்கியுள் ளீரவர் சொன்னப டிசெய்யும்,
    வழக்குவேண் டாமென்றார் பாருமடி. 125

ஐயையோ தெய்வமே! யாதுசெய் வேமிதை
    யாருடன் சொல்வேமி னிமேலென்று
செய்யுந் திருவுள மொன்றைநம் பித்தீவார்
    தினங்கண்ணீர் சொரிகிறார் பாருமடி. 126

இருபத்தே ழாமாண்டு கார்த்திகை யாறில்
எங்கள்ம கிமைசேர் ஸ்ரான்லிமன்னர்
பரிபாலிக் குழுறை யாகயாழ்ப் பாணம்
பார்க்கவந் தார்செய்தி கேளுமடி. 127

ஏர்பன் கவுன்சில் தொழிலா ளர்சங்கம்
யாழ்ப்பாண வெல்லேயோ டல்லேப்பிட்டி
தேருஞ்ச னங்களிப் பண்ணேவேண் டுமென்று
தீட்டினு ரற்றிறசில் பாருமடி. 128

வேலணே யோடல்லேப் பிட்டிமண் டைதீவு
மேவுஞ் சனங்கள் கவர்னர் துரைமுன்
பாலம்வேண் டுமென்றோர் பகிரங்கக் கூட்டம்
பண்ணேயிற் கூடினர் பாருமடி. 129

சிறுத்தீவுக் கூடாகப் பாலங்கட் டித்தந்தாற்
செலவுஞ்சு ருக்கமா மரசினர்க்கும்
உரித்தேயெல் லாருக்கு முபயோக மாமென
ஒன்றுபட் டுக்கேட்டார் பாருமடி. 130

ஆகவோ ரைம்பதி னுயிரம் ரூபா
அராலிக்கோஸ் வேகட்டப் போதுமென்றோம்
ஏகுமுன் எஸ்றிமேற் இப்போம திப்பைந்து
லட்சமென் றூர்கவர்னர் பாருமடி. 131

ஆதலி னுலுங்கள் பண்ணேப்பா லத்தையும்
ஆலோச னேசெய்து பார்ப்பேமென
பாதக மில்லாமல் கவர்னர் துரையங்கே
பதில்கூறி னூர்பின்பு பாருமடி. 132

நன்றாக யோசனே செய்தேக வர்னரும
ராலிப்பா லவேலே நிறுத்துமென்று
ஒன்றாக இஞ்சிநீ யர்த்தலே வர்க்கு
உடனேயே றிவித்தார் பாருமடி. 133

நாற்பதி னுயிரம் ரூபாஎ டுத்ததும
ராலிக்க டற்சேற்றிற் கல்லுகள்போட்டதும்
நீர்ப்பாய்ச்ச லுக்கிவர் அளவுக ணித்ததும்
நின்றுபோச் சேபின்னர் பாருமடி. 134

இன்னமும் வர்மம் நீங்கவில் லைஐயோ
எங்கள் பிரதி நிதிகளுக்கு
பின்னும ராலியை மோஷன் கொடுத்தே
பிறப்பித் திருக்கிறார் பாருமடி. 135

சட்ட சபைதனிற் பண்ணைக்கோர் பாலம்
தர்க்கமிட் டும்வரச் செய்வேனென்று
இட்டமு டன்சயின் வைத்துத்த ருவார்க்கே
இனிமேற் சம்மதங் கூறுமடி. 136

ஆரும்பு கழ்புத்நூர் மாணிக்க மாமவர்
அன்புநி றைந்தப ரிஸ்றருமாம்
பேரும்ரா மநாதன் பிரபும கான்பண்ணைப்
பிரியநண் பரிவர் கேளுமடி. 187

அன்பாத ரவினில் அன்னையொப் பார்குரு
ஐசாக் தம்மையர் டக்றருமாம்
என்பார வர்பண்ணைக் கானவெ குநன்மை
யியற்றியுள் ளார்மகான் பாருமடி. 138

சத்திய மாயிவர் பரவுப காரியாம்
சண்டிருப் பாய்மானிப் பாய்த்தலைவர்
பத்திசேர் சோம சுந்தரம் பிள்ளை
பண்ணைக்குற் றநண்பர் பாருமடி. 139

சென்யோன் கொலிஜ்ஜின் மாஸ்றர் குரேசற்
சென்றற் கொலிஜின்ஹெட் மாஸ்றரான
நன்மைசேர் சண்முகம் சவரிமுத்து மாஸ்றர்
நண்பராம் பண்ணைக்கே பாருமடி. 140

பன்னுதொ ழிலாளர் சங்கத்தி லேபண்ணைப்
பாலநன் மைக்கே பி. தம்பையாவும்
மன்னும பிமானி ஏரம்ப மூர்த்தியும்
மற்றிதற் குத்துணை பாருமடி. 141

இத்துடன் பண்ணைப் பாலச் சரிதம்
இயம்பினே மேயினி மேல்நடக்கும்
மற்றநி கழ்ச்சியும் திருவருள் தந்தால்
வாங்கிச்சொல் வோம்பின்னர் கேட்குதிரே. 142